**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 108 /2018**
**நாள் 02/09/2024, திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - சாந்தி | க/பெயர் - ராஜா |
| வயது - 51 | தொழில் - |
| விலாசம் - எண் 16, 3வது குறுக்கு தெரு, டி.டி.தோட்டம், பெரம்பூர், சென்னை -11. | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்சி (DW1)-**

நான் 3ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. ஆனால், என் பெயரை தமிழில் எழுதுவேன். என்னுடைய மூன்று சகோதரிகளில் இரண்டு சகோதரிகளும், தாயும் பெருங்காவூரில் உள்ளனர். மற்றொரு சகோதரி பொன்னேரியில் உள்ளார். மூன்றாம் வாதியை எனக்கு தெரியும். வாதிகள் வசித்து வரும் தாவா சொத்திற்கு 100 மீட்டர் தூரத்தில் தான் எனது தாயாரும், எனது இரு சகோதரிகளும் வசித்துவருகின்றார்கள் என்றால் சரிதான். வாதிகள் மீது நான் ஒரு வழக்கு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 182/2021 -ல் நான் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 182/ 2021ல் வாதிகள் தாவா சொத்தில் 2001ல் இருந்து அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் அந்த சொத்தை மீட்டு கொடுக்குமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அசல் வழக்கு எண் 182/2021ல் தாக்கல் செய்த சத்தியபிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2ல் பிரதிவாதிகள் வழக்கு சொத்தை அனுபவித்து வருவதால் அந்த

சொத்தை மீட்டு கொடுக்குமாறு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சத்திய பிரமாண வாக்குமூலம் **வா.த.சா ஆ 18** ஆகும். தாவா சொத்தில் 1ம் வாதியின் கணவர் சண்முகம் உயிருடன் இருக்கும்போதே வழக்கு சொத்தில் அவர்கள் குடியேறிவிட்டனர் என்றால் சரிதான். மேற்படி சண்முகம் 2004ல் காலமானார் என்றால் சரிதான். 2001ல் சண்முகம் உயிருடன் இருக்கும்போது தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின்சார வாரியத்திடம் இருந்து மின் இணைப்பு வாங்கினார் என்றால் சரிதான். என் தந்தை முனுசாமி 2006ல் காலமானார். என் தகப்பனார் உயிருடன் இருக்கும் போதும், அதற்கு பிறகும் முதலாம் வாதி பெயருக்கு தாவா சொத்தில் தொகுப்பு வீடுகட்டுவதற்கு அனுமதி அளித்தபோது தான் எங்களுக்கும் வாதிகளுக்கும் பிரச்சனை ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு முன்பே வாதிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை இருந்து வந்தது. 2004ல் இருந்து 2006 வரையில் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு சண்முகம் தான் வீட்டு வரி செலுத்தியுள்ளார் என்றால் காலி இடத்திற்கு வரி செலுத்த தேவையில்லை என்று சொல்லிவிட்டதால் நாங்கள் வரி செலுத்தவில்லை. வாதிகள் குடிசை போட்டுக்கொண்டு அந்த இடத்தில் வரி செலுத்திவந்தனர். 2007 முதல் 2017வரை 1ம் வாதி தான் வீட்டு வரி செலுத்திவந்தார் என்றால் சரிதான். 2017ல் இருந்து இன்றைய தேதிவரை 1ம் வாதி தான் வரி செலுத்திவருகிறார் என்றால் அவர்கள் அந்த சொத்தில் இருந்து வருவதால் வரி செலுத்தி வருகின்றனர். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் கட்டணத்தை சண்முகம் உயிருடன் இருக்கும் வரையில் அவர் செலுத்திவந்தார் என்றும், அவர் காலமான பிறகு 1ம் வாதி செலுத்திவருகிறார் என்றால் சரிதான். வா.த.சா ஆ 11 புகைப்படமானது வாதிகள் தொகுப்பு வீடு கட்ட ஆரம்பிக்கும் போது தான் நாங்கள் சென்று பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. எத்தனை நாட்களுக்கு ஒரு முறை பெருங்காவூருக்கு வந்து செல்வேன் என்றால் 2 வாரத்திற்கு

ஒரு முறை வந்து செல்வேன். முதலாம் வாதியின் கணவரும் அவரின் இறப்பிற்கு பிறகு வாதிகளும் தாவா சொத்தில் இருந்து வருகின்ற விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது 1ம் வாதி பெயருக்கு தாவா சொத்தில் தொகுப்பு வீடு கட்டிக்கொள்ள அனுமதி அளித்த கடிதம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் பத்தி 4ல் "முதலாம் வாதியின் கணவரும் 2 மற்றம் 3ம் வாதியின் தந்தை காலம்சென்ற சண்முகம் இவ்வழக்கு சொத்தில் குடிசைகட்டிக்கொண்டதாகவும், வரி வகையரா செலுத்தியதாகவும், மரம் நட்டதாகவும் பொய்யான சங்கதிகளை கூறியுள்ளனர் என்று சொல்லியுள்ளேன். நானே அசல் வழக்கு எண் 182/2021ல் 2வது பத்தில் அவ்வழக்கின் பிரதிவாதிகளான டில்லியம்மாள், சங்கிதா, வசந்தகுமார் ஆகிய அவ்வழக்கின் எதிர்வாதிகள் என்னுடைய வழக்கு சொத்தை சட்டத்திற்கு புறம்பாக அனுபவத்து வருவதையும் அதில் கட்டியுள்ள வீட்டை இடித்து அப்புறப்படுத்தி வழக்கு சொத்தை எதிர்வாதிகளிடம் இருந்து மீட்டு என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்று முன்னுக்கு பின் முறனாக நான் தாக்கல் செய்த பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் அனுபவத்து வருவதால் முதலாம் வாதி பெயருக்கு அனுபவ சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றால் அந்த இடத்தில் அவர்கள் வீடு கட்டி இருந்து வந்ததால் கொடுத்தார்கள் அது உண்மையாகுமா. வாதிகள் 20 வருடத்திற்கு மேலாக எங்களுக்கு தெரிந்தே தொடர்ந்து தாவா சொத்தில் அனுபவத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். வாதிகள் 20 வருடத்திற்கு மேலாக எங்களுக்கு தெரிந்தே தொடர்ந்து தாவா சொத்தில் அனுபவத்தி வருகிறார்கள் என்பததால் அதன் பிறகு 2018ல் எனது பெயருக்கு எனது தாயார் மற்றும் சகோதரிகள் எழுதிக் கொடுத்த பி.த.சா ஆ 1

பாக உரிமை அக்கு விடுதலை பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. 2014ல் என் பெயருக்கு பாக உரிமை அக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது 2018ல் அப்பத்திரம் பதிவு செய்யப்பட்டது. 2014ல் எழுதி கையொப்பம் போட்டு என்னிடம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் மேற்சொன்ன விவரங்கள் பொய் என்றும் பி.வா.சா ஆ 1 ஆவணத்தில் உள்ள முத்திரை தாள் 12.03.2018 அன்று தான் வாங்கப்பட்டது அதன் பிறகு தான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. 2014லிலேயே எனக்கு எழுதி கொடுத்துவிட்டார்கள். 2017ல் 1ம் வாதி தொகுப்பு வீடு கட்ட ஆரம்பிக்கும் போது நாங்கள் பிரச்சனை செய்ததால் எங்கள் மீது அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகார் ஏற்ப்பு மனு வா.த.சா ஆ 8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து எவ்வித இடையூறும் இன்றி ஆண்டு அனுபவித்து வருவதால் வழக்கு சொத்தில் அவர்களுக்கு எதிரிடை அனுபவ பாத்திய உரிமை மூலம் தாவா சொத்தில் பெற உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 20 வருடம் இருந்தால் உரிமை ஆகிவிடுமா. தாவா சொத்தில் அவர்கள் நீண்ட காலம் அனுபவத்தில் இருந்து வருவதால் எங்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்க கூடியது என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**